# புத்தளம் உப்புவெளியில் புலிகள் தாக்கி 10 இராணுவம் பலி!

(புத்தளம்)

புத்தளத்தில் உப்புவெளி வழியாகச் சென்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் பத்து இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.பலரக நவீன ஆயுதங்களும் இராணுவத்திடமிருந்து கைப் பற்றப்பட்டன.

புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை நாலரை மணியளவில் பொன் பரப்பி இராணுவ முகாமிலிருந்து, பலுக்காத்துறை ராணுவமுகாமுக்கு உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்த சிங்கள இராணுவத்தினரை உப்புவெளியில் வைத்து விடுதலைப்புலிகள் வழிமறித்துத் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் போது (4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04

விலை ரூபா: 3-00

ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் திசைரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஆவணி மீ 04 ஆம் உ திங்கட்கிழமை (20 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 28 ஓசை 183

## படுகொலையைக் கண்டித்து உண்ணாவிரதம்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப் படுவதைக் கண்டித்து தமிழகமெங்கும் பரவலாக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

சென்னையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட உண்ணாவிரதத்தில் தமிழக முன்னணி நடிகர்களான விஜயகாந் எஸ்.எஸ். சந்திரர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அதிரடிப்படையுடன் முஸ்லிம் குண்டர் தமிழின அழிப்பு!

## துறைநீலாவணையில் 60 தமிழர்கள் இரவில் வெட்டியும் சுட்டும் கொலை!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள துறைநீலாவணையினுள் அதிரடிப்படை சகிதம் கடந்த பன்னிரெண்டாம் திகதி புகுந்த ஆயுதந் தாங்கிய முஸ்லிம் குண்டர்கள் அறுபது தமிழர்களைத் துடிதுடிக்கக் கூரிய ஆயுதங்களினால் வெட்டியும் குத்தியும் துப்பாக்கியால் சுட்டும் கொலை செய்தனர் என்ற தகவல் சிறிது தாமதமாகக் கிடைத்துள்ளது. இப்பகுதிகளில் சிங்கள இராணுவம், அதிரடிப்படை முஸ்லிம் குண்டர்கள் தமிழின அழிப்பில் ஒன்றுபட்டு ஈடுபடுகின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர் படுகொலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஸ்ரீலங்கா இராணுவத்தினரும், சிங்கள ஊர் காவற்படையினரும், இவர்களுடன் முஸ்லிம் ஊர்காவற் படையினரும் சேர்ந்து தமிழர்களைக் கண்ட இடங்களிலெல்லாம் குத்தியும், வெட்டியும், சுட்டும் கொன்று வருகின்றனர். இதனால் தமிழர்களின் பல குடும்பங்களே (4 ஆம் பக்கம் பார்க்க)

## சினைப்பருக்கு சிப்பாய் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமில் தண்ணீர் தாங்கியில் செண்றியில் நின்ற சிப்பாய் (4ஆம் பக்கம் பார்க்க)

## "புலிகளிடம் எலக்ரோனிக் கண்ணிவெடி" -சிறில் ரணதுங்க

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த ஜூன் மாதம் பதினொராம் திகதி ஆரம்பமான யுத்தத்தில் இதுவரை ஆயிரம் சிறிலங்கா இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும், நவீனரக எலக்ரோனிக் (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாடு சட்டசபையில் இன்று தமிழர் பிரச்சினை

(சென்னை)

தமிழ்நாட்டிற்கு இலங்கையிலிருந்து பெருமளவில் தமிழர்கள் அகதிகளாக வந்து குவிவது பற்றிய பிரச்சினை இன்று தமிழ்நாடு சட்டசபை கூடும் போது கிளப்பப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியில் வாகனம் சிதறியது!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பகல் 12.30 மணிக்கு வங்காலை இராணுவ முகாமிலிருந்து தள்ளாடி இராணுவ முகாமுக்கு வாகனங்களில் சென்றுகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு விடுதலைப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணி வெடியில் ஆறு படையினர் கால் இழந்தனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில்விடுதலைப் புலிகள் வைத்த கண்ணி வெடிக்கு ஆறு இராணுவத்தினர் கால்களை இழந்தனர்.

நேற்றுமுன்தினம் கிரான் குளத்தில் ரோந்து வந்த சிங்கள இராணுவத்தினருக்கு விடுதலைப் புலிகள் வைத்த கண்ணி வெடி வெடித்ததில் ஒரு இராணுவத்தினர் கால்களை இழந்தார்.

அதேதினம் 36ஆம் கிராமத்தில் விடுதலைப்புலிகள் வைத்த இரண்டு கண்ணிவெடி (4ஆம் பக்கம் பார்க்க)

## காட்டிக் கொடுத்த இவருக்கு மரணதண்டனை

விடுதலைப் புலிகளைக் காட்டிக் கொடுத்த ஈ.பி.ஆர் எல் எவ் உறுப்பினருக்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## பட்டினியால் குழந்தைகள் மடிவு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழர் தங்கியுள்ள அகதி முகாம் ஒன்றில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையால் எட்டுக் குழந்தைகள் இறந்ததாகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

## யாழ். ப. நோ. கூ. சங்கத்துக்கு 60 மூடை மா கொடுக்கப்பட்டது!

(பருத்தித்துறை)

முதல் கப்பலில் வந்து புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் யாழ். உணவுத் திணைக்களத்தால் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த 135 மூடை மாவில் 60 மூடைமா யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் 75 மூடை மா (4ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரிப் பகுதியில் நேற்று விமானங்கள் லீலை; ஹெலிசூட்டு மூவருக்குக் காயம்!

(அலுவலக நிருபர்)

சாவகச்சேரி தனங்கிளப்பு வெளியில் உள்ள சேற்றுப் பகுதிக்குள் நேற்று இரண்டு குண்டுவீச்சுவிமானங்கள் மாறி மாறி தாக்குதல் ஒன்றை நடத்திவிட்டு மறைந்தன இதனைத் தொடர்ந்து சாவகச்சேரியை அண்டிய பகுதிகளில் ஹெலிக் கொப்ரர் தாக்குதலும் நடாத்தப்பட்டது.

நேற்றுக்காலை எட்டரை மணியளவில் இரண்டு மாச் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரமுனைச் சம்பவ விபரம்

# ஆடு,மாடு வெட்டுவதுபோல் சிறுவர் முதல் பெண்கள் உட்பட முதியோர் வரை முஸ்லிம் குண்டர்களால் படுகொலை!

(அம்பாறை)

வீரமுனையில் பிள்ளையார் ஆலயம் என்னும் இடத்தில் கடந்த 17 ஆம் திகதியன்று முஸ்லிம் குண்டர்களும், சிங்கள ஊர்காவற்படையினரும் சேர்ந்து ஈவு, இரக்கமற்ற முறையில் நடத்திய கொலை வெறியாட்டச்சம்பவத்தின் போது ஐந்துமாதக்குழந்தைகள், சிறுவர்கள், பருவப் பெண்கள், திருமணமான ஆண்கள், பெண்கள் உட்பட பெரும்பாலான தமிழர்கள் கொடூரமான முறையில் தாக்கப்பட்டுக் கொலை செய்யப் பட்டுள்ளனர். இத்தாக்குதலினால் கொலைசெய்யப்பட்ட தமிழர்களின் விபரம் வருமாறு;-

எட்டுவயது சிறுவர்கள் இருபத்தி இரண்டுபேர் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா ஜனாதிபதிக்கு யாழ் பிரஜைகள் குழு கடிதம்

# வாக்குறுதிக்கு மாறாக தமிழ் மக்களுக்கு எதிராகவே இன்று யுத்தம் நடைபெறுகிறது

## ஆலயங்கள், வயோதிபர் இல்லங்கள், அகதி முகாம்கள் ஆஸ்பத்திரிகள், எவையுமே குண்டு வீச்சுக்கு தப்பவில்லை

யாழ். குடா நாட்டில் கோவில்கள், அகதிமுகாம்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், குடியிருப்பு மனைகள் ஆகியவற்றின் மீது கடந்த சில நாட்களாக குண்டுத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளமை குறித்து யாழ். பிரஜைகள் குழுவினர் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தமாதம் 6ஆம் திகதியிட்டு எழுதப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

### பழைய கடிதத்தை நினைவுபடுத்துகிறோம்

யாழ். மாவட்டத்தில் அவலத்துக்குள்ளான மக்களுக்கு அவசர நிவாரணம் அளிக்க வேண்டுமென 27-7-90இல் தங்களுக்கு எழுதிய கடிதத்தை தங்களுக்கு நினைவூட்டி தற்போது நிலைமை மேலும் மோசம் அடைந்துள்ளதை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

### குடிமனை மீது தாக்குதல்

குடிமனைகள் மீது கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுக்கள், ஆட்டிலறி ஷெல் ஏவுகணைத் தாக்குதல் போன்றவற்றால் இப்பகுதி மக்களின் வாழ்க்கை முறை மிக மோசமடைந்துள்ளது.

### வாக்குறுதிக்கு மாறான யுத்தம்

தாங்கள் அளித்த வாக்குறுதிக்கு மாறாக யுத்தம் தற்போது தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக திருப்பப்பட்டுள்ளது. யாழ். நகரிலும் கிராமப் பகுதிகளிலும் கொடூரமான வானத் தாக்குதல்களும் ஆட்டிலறி ஷெல் தாக்குதல்களும் ஏவுகணைத் தாக்குதல்களும் குடிமனைகள் மீது நாளுக்கு நாள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். சந்தைப் பகுதியிலும் கிராமப் பகுதியிலும் 500க்கும் அதிகமான வீடுகளும் 300க்கும் அதிகமான கடைக்கட்டிடங்களும் குண்டு வீச்சினால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் அநேகமானவை தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளன.

### வணக்க ஸ்தலங்கள் மீது தாக்குதல்

சமய வழிபாட்டுத்தலங்களும் விதிவிலக்குப் பெறவில்லை.

யாழ் ஆயர் இல்லம், இலங்கையிலேயே பெரிய கோவில்களில் ஒன்றான யாழ். ஆசனக்கோவில், புனித சம்பத்தரிசியார் கல்லூரி அகதி முகாம், றோமன் கத்தோலிக்க மாதர்களினால் நடத்தப்படும் வயோதிபர் இல்லம் திருக்குடுமபக் கன்னியர் மடத்தினால் நடத்தப்படும் சிறுவர் இல்லம் ஆகியனவும் விமானக்குண்டு வீச்சுக்கு இலக்காகி உள்ளன.

யாழ். நகரிலுள்ள பிரதான பள்ளிவாசல், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றை நோக்கி குண்டுகள் வீசப்பட்ட போதிலும் இலக்கு தவறியதால் அவை தப்பிப் பிழைத்தன. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்பாக விழுந்து வெடித்த ஷெல் ஏவுகணையினால் 3 பேர் உயிரிழந்தார்கள்.

### உணவு எரிபொருள் தட்டுப்பாடு

உணவுப் பொருள் விநியோகம் எரிபொருள் விநியோகம் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன. வடக்கு கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நிரந்தர வாசிகளுக்கும் உதவுவதற்கென இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட ஆறுகோடி ரூபாவும் மேலதிகமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திலும் ஆறுகோடி ரூபாவும் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆறு கோடி ரூபாவும் வெளிநாடுகள் அன்பளிப்புச் செய்துள்ளன.

### மக்கள் தொகை அதிகரிப்பு

யாழ். மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 9 லட்சம் பேராகும் அதே வேளையில் குடா நாட்டுக்குள் மாத்திரம் இடம் பெயர்ந்து அகதிகளாக உள்ளோர் 327000 பேரும் வடக்கு - கிழக்கின் மொத்த அகதிகள் 850000 பேரும் உள்ளனர். இதற்கிடையில் 2000 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன் 1000 பேருக்கும் அதிகமானோரைக்காணவில்லை. 800 பேருக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### முல்லைத்தீவு நிலைமை

இந்த யுத்தத்தின்போது மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டமாகும். இம் மாவட்டம் முற்று முழுதாக குழப்ப நிலையிலும் மக்களின் நாளாந்த வாழ்க்கை முறை அடியோடு பாதிக்கப்பட்டும் உள்ளது. போக்குவரத்தும் சகல தொடர்புகளும் ஸ்தம்பித்துள்ளன.

உத்தன்கேணி பிள்ளையார் கோயில் முல்லைத்தீவு பட்டணம், சரித்திரப் பிரசித்தி வாய்ந்த வற்றாப்பளை அம்மன்கோயில், முள்ளியவளை ஆகியன வான்தாக்குதலுக்கும் ஆட்டிலெறிஷெல் ஏவுகணைத் தாக்குதலுக்கும் உள்ளாகி உள்ளன. இப் பகுதிகளிலுள்ள மக்கள் வீடு வாசல்களையும் உடமைகளையும் விட்டுவெளியேறி வேறிடங்களுக்கு தப்பி ஓடிவிட்டனர்.

### மருந்து இல்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் 23-7-90 இல் எடுத்த மதிப்பீட்டின் படி திருமலையிலிருந்து தப்பி வந்த 32,029 அகதிகளும் முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்த 15,000 அகதிகளும் ஏனைய மாவட்டங்களிலிருந்து வந்த 2500 அகதிகளும் முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்,

இந்த அகதிகள் மாற்று உடை இன்றி, படுக்கப் பாய் இன்றி உணவு நீர் ஆகியன பற்றிய பேச்சுக்கே இடமின்றி வேதனை நிறைந்த வாழ்க்கை வாழ்கிறார்கள். உலர் உணவுப் பொருள் விநியோகம் கூட இன்னமும் உரிய முறையில் இடம்பெறவில்லை. பெண்கள், குழந்தைகளின் நிலை சொல்லுந் தரமன்று. முகாம்களிலோ அருகிலுள்ள ஆஸ்பத்திரிகளிலோ மருந்துப் பொருள்கள் இல்லை. பாம்புக்கடி,விசர்நாய்க்கடி நோய்களுக்குத் தடுப்பு மருந்து கிடையாது. துரதிர்ஷ்டவசமான இந்த மக்களை பசி, பட்டினியும் துன்பமும் பிணியுமே வாட்டி வதைக்கின்றன. மண்ணெண்ணெய் இல்லாது மக்கள் இருட்டில் வாழ்வது நிலைமையை மேலும் மோசமடையச் செய்கிறது.

இப்பகுதிமக்கள்மீது இரண்டுமாதங்களுக்குமுன்னர்தொடுக்கப்பட்ட இந்த யுத்தத்தினால் பயமும் பீதியும் மக்கள் மனதில் குடிகொண்டுள்ளன.

யாழ். மாவட்டத்துக்கும் ஏனைய மாவட்டங்களுக்குமான மின் விநியோகமும் வவுனியாவில் துண்டிக்கப்பட்டுள்ளது.

எனவே கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களையும் ஷெல் ஏவுகணைத் தாக்குதல்களையும் நிறுத்துமாறும் வடக்கு – கிழக்கு மாவட்டங்களுக்கு வழமையான உணவு மருந்துப் பொருள் விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறும் வேண்டுகிறோம். மன்னாருக்கு உறுதி அளிக்கப்பட்ட உணவுக்கப்பல் இன்னமும் அங்கு செல்லவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். உணவுக்கும் அத்தியாவசிய பொருள்களுக்கும் நிலவும் கடும் தட்டுப்பாடு பெருமளவில் அகதிகள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

யாழ். போதனா மருத்துவமனையையும் ஏனைய ஆஸ்பத்திரிகளையும் மீண்டும் தாமதமின்றித் திறக்க வழி செய்யுங்கள். யாழ்ப்பாணத்துக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் மின் விநியோகத்தை மீண்டும் வழங்குங்கள்.

## குருநகர் அகதிகளுக்கு நிவாரணம் இல்லை

(விசேடநிருபர்)

குருநகரில் இருந்து இடம் பெயர்ந்து அரியாலை கிழக்கில் தஞ்சமடைந்துள்ள ஆயிரக் கணக்கான குடும்பங்கள் நிவாரணம் இல்லாமல் பாதிக்கப் பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரியாலை கிழக்கு தமிழ் கலவன் பாடசாலை,வேளாங்கண்ணி மாதாகோவில், அந்தோனியார் ஆலயம், வைரவநாதன் தோட்டம், கறுப்பையா வளவு போன்ற இடங்களில் இவர்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

உணவு, வைத்திய வசதிகளைப் பெற நீண்ட தூரம் கால்நடையாக அலைந்து செல்லும் அவலங்களாலும் குருநகர் அகதிகள் பாதிக்கப் பட்டு வருகின்றனர். (21


வரிவிளம்பரம்

**காணாமல் போய்விட்டது**

வ. குமாரசாமி, காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறைஆகிய எனது 451141317 இலக்கமுடைய அடையாள அட்டை 14-8-90 அன்று நல்லூர் வீதியில் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட விலாசத்திற்கு அறிவிக்குமாறு தயவுடன் கேட்கின்றேன்.

(R/584)

**பனை அபிவிருத்திச்சபை ஊழியர்கள் கவனத்துக்கு**

பனை அபிவிருத்திச்சபையின் சகல ஊழியர்களும் எதிர்வரும் 22-08-90 புதன் கிழமை காலை 10-00 மணியளவில் திருநெல்வேலி விவசாய பாடசாலை மண்டபத்தில் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பொதுமுகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை

(B/1331)

**1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு 17-12-1919 உதிர்வு 30-08-1989

திதி 20-08-1990

அமரர்

**மயில்வாகனம் வேலும்மயிலும்**

(பருத்தித்துறை பிரபல சட்டத்தரணியும் சமாதான நீதவானும் முன்னைநாள் நகரபிதாவும்)

சட்டத்தைப் பரப்புதலிலும் பொதுநலத் தொண்டிலும் புகழை நாடாது அரும்பணியாற்றிய சட்டத்தரணி அமரர் மயில்வாகனம் வேலும்மயிலும் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உபாத்தியாயர் இல்லம்,
பருத்தித்துறை.

மனைவி,
மக்கள்.

(B/1336)

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

**இல. 78 பலாலி வீதி திருநெல்வேலி**

(திருநெல்வேலிச் சந்தியிலிருந்து யாழ்நகர் நோக்கி 400 யார் தூரத்தில்)

**அறிவித்தல்**

எமது கல்லூரியில் கல்விபயிலும் மாணவர்கள் அனைவரும் 26-8-90 ஞாயிறு காலை 9 மணிக்கு மேற் கூறப்பட்ட விலாசத்திற்கு தவறாது சமுகந்தருமாறு வேண்டப்படுகின்றீர்கள். வரும்பொழுது பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட பதிவேட்டையும், பதிவு இலக்கத்தையும் கொண்டு வரவும்.

20-8-90
(B-1338)

இயக்குநர்
பட்டப்படிப்புகள் கல்லூரி

## சிந்தனைக்கு

தடி எடுத்தவன் எல்லாம்
தண்டல் காரனா?

— தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 20-08-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# இவர்களுக்கு யார் இந்த அதிகாரம் வழங்கியது?

பாரசீக வளைகுடாப் பகுதியில் இன்று போர் மேகம் சூழ்ந்துள்ளது. போருக்குரிய முஸ்தீப்புக்கள் வளைகுடாப் பகுதியில் நிகழ்ந்து வருகின்றபோதிலும், வளைகுடா நாடான ஈராக்கும், வளைகுடாவிற்கு வெளியிலுள்ள அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகமுமே இப் போர் முஸ்தீப்புக்களில் ஈடுபட்டுள்ளன. அதாவது வளைகுடாப் பகுதியில் ஈராக்குடன் ஒரு போரை நடத்த மேற்குலக நாடுகள் தயாராகி வருகின்றன.

ஈராக் - குவைத்திற்குள் தனது படைகளை அனுப்பியதுடன் ஆரம்பித்த இன்றைய வளைகுடாப் பிரச்சினை பாரசீக வளைகுடா நாடுகளுக்குரியது. அதிலும் குறிப்பாக அரபு உலகிற்குரிய பிரச்சினையாகும். ஈராக் - குவைத்துக்குள் படைகளை அனுப்பியது சரியா, பிழையா என தீர்மானிக்க வேண்டியவையும், பிழையாயின் ஈராக் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களும் அவர்கள்.

அரபு நாடுகள் பிரச்சினையைத் தீர்க்க முடியாத பட்சத்தில் ஐ. நா. சபை பிரச்சினையைத் தீர்க்க முற்படலாம். அதற்கு அனைத்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்போடு கடந்த காலத்தில் ஐ நா. மேற்கொண்ட நடவடிக்கைகளை ஒத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

ஆனால் ஐ. நா. சபையின் ஏகபிரதிநிதிகள் தாம் என்ற மாதிரி அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளான மேற்குலகமும் நடந்து கொள்வது கண்டனத்திற்குரியது.

ஐ. நா. சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து பல நாடுகளுக்கு எதிராக கண்டனத் தீர்மானங்களை அது நிறைவேற்றியுள்ளது. இதில் பெரும்பாலானவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஒரு சில நடைமுறைப் படுத்தப்பட்டன. ஐ நா. சபை அமெரிக்காவிற்கு எதிராகவும் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளது. ஐ நா. சபை தனது வரலாற்றில் அநேக கண்டனத் தீர்மானங்களை தென்ஆபிரிக்காவிற்கும், இஸ்ரவேலுக்கும் எதிராகவே நிறைவேற்றியது.

இத்தீர்மானங்கள் மீது அநேகமாக நடவடிக்கைகள் எடுக்க முடியவில்லை அதற்கு இடைஞ்சலாக அமெரிக்காவே இருந்து வந்துள்ளது. உலகின் பெரும்பாலான நாடுகள். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என தீவிரமாக இருந்தபோது அமெரிக்கா தனது ''வீட்டோ'' அதிகாரத்தைப் பாவித்து தீர்மானங்களை ரத்துச் செய்தது.

தவிர்க்க முடியாத நிலையில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும் அவற்றை செயற்படுத்துவதில் அமெரிக்கா அக்கறையாக இருக்கவில்லை. எடுத்துக் காட்டாக தென்ஆபிரிக்காவிற்கு எதிராக மேற்கொண்ட பொருளாதாரத் தடையை நிறைவேற்ற அமெரிக்கா ஒத்துழைக்கவில்லை மறைமுகமாக தென்ஆபிரிக்காவுடன் வர்த்தகத்தைச் செய்தே வந்தது.

இஸ்ரவேலின் அடாவடித்தனங்கள் கண்டிக்கப்பட வேண்டும் என பலமுறை ஐ. நாவில் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டபோது அமெரிக்கா அதனைத் தீவிரமாக எதிர்த்தது. இஸ்ரவேலுக்காகவே அமெரிக்கா தனது ''வீட்டோ'' அதிகாரத்தை மிக கூடுதலான தரம் ஐ. நாவில் பயன்படுத்தியது.

இவ்வாறாக ஐ. நாவில் பொதுத் தீர்மானங்களுக்கு எதிராகவே நடந்துகொண்டு வந்த அமெரிக்காவிற்கு ஈராக்கை முற்றுகை இடும் அதிகாரத்தை யார் கொடுத்தது? சிறிய நாடு ஒன்றை அண்டைய பெரிய நாடு ஆக்கிரமிப்பதைத் தடுக்க அமெரிக்காவிற்கு உரிமை உண்டானால், தனது அண்டை நாடுகளான கிரனடா, பனாமா ஆகியவற்றில் ஆக்கிரமிப்புச்செய்த அமெரிக்காவின் செயலைத் தட்டிக்கேட்பது யார்?

ஐ. நா. ஈராக் மீது பொருளாதாரத் தடையை நிறைவேற்றுவதாயின் அதை நிறைவேற்ற வேண்டியவர்கள் ஐ. நா. சபையைச் சேர்ந்தவர்கள். அதன் பொறுப்பு ஐ நா. செயலாளருக்கே உரியது. கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளை செயலாற்றி அதனை ஐ. நா. சபை செய்யலாம். ஐ நா. சபையின் பெயரால் அமெரிக்கா, தனதும், தனது கூட்டாளிகளின் நலனுக்குமாக எடுக்கும் நடவடிக்கைகளை எவரும் ஏற்க முடியாது.

உலகின் ''தன் போர்'' நிலைமை கடந்த சில வருடங்களாகவே தணிந்து வருகின்றது. அதனை அமெரிக்காவின் இச்செயல்கள் வெகுவாகப் பாதிக்கலாம். ''கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்'' என்பது போல் வல்லரசுகள் எதிரும் புதிருமான நடவடிக்கைகள் மேற்கொண்டால்தான் உலகின் சமநிலை பேணப்படுமா என்ற கேள்வியை அமெரிக்காவின் நடவடிக்கைகள் ஏற்படுத்துகின்றன.

# 'பணயக் கைதிகளாக உள்ள வெளிநாட்டவரை விடுவிக்கவும்'

## ஈராக் அரசுக்கு பாதுகாப்புச் சபை கோரிக்கை

(நியூயோர்க்)

ஈராக்கிலும் குவைத்திலும் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டுப் பிரஜைகள் அனைவரும் சுதந்திரமாக வெளியேறுவதற்கு உடனடியாக அனுமதிக்க வேண்டுமென்று ஈராக்கை ஐ. நா. பாதுகாப்புச் சபை அவசரத் தீர்மானம் மூலம் கேட்டுள்ளது.

பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டத்தில் ஈராக்கிலும் குவைத்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர் சுதந்திரமாக வெளியேறுவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று ஈராக்கைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. ஈராக்கிலும் குவைத்திலுமுள்ள வெளிநாட்டவர்களின் பாதுகாப்புக்கும் பந்தோபஸ்துக்கும் ஈராக் அரசே பொறுப்பு என்றும் அத் தீர்மானம் தெரிவித்தது.

கடும் வார்த்தைகளைக் கொண்ட இத்தீர்மானத்தில் குவைத்தின் வெளிநாட்டுத் தூதர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்ட முடிவை நீக்கிக் கொள்ள வேண்டுமென்றும் ஈராக்கை பாதுகாப்புச் சபை கேட்டுக் கொண்டது.

### இரு பிரதிநிதிகள் செல்கின்றனர்

ஈராக்கிலும் குவைத்திலும் ஈராக் அரசினால் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளி நாட்டவர்கள் பற்றிப் பேசுவதற்காக ஐ. நா. தலைமைச் செயலர் பெரஸ்டிக்கோயாவின் விசேஷ தூதுவர்களாக இருவர் பாக்தாத் செல்லவிருக்கின்றனர்.

# ஈராக் கப்பல் மீது அமெ. போர்க் கப்பல் சூடு

(பாக்தாத்)

ஈராக்கின் இரண்டு கப்பல்களை நோக்கி அமெரிக்க போர்க் கப்பல்கள் எச்சரிக்கை நடவடிக்கையாக நேற்றுத் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனவென்றும் ஈராக் கப்பல்கள் நிற்காமல் போய் விட்டனவென்றும் வளைகுடாச் செய்திகள் தெரிவித்தன.

ஈராக் கப்பல்களின் முன்பும் பின்பும் சுடப்பட்டதாகவும் செய்திகள் தெரிவித்தன.

### அணு ஆயுதமும் ரசாயன ஆயுதமும்

அமெரிக்கா முதலில் அணு ஆயுதத்தைத் உபயோகிக்காதிருந்தால் ஈராக்கும் ரசாயன ஆயுதத்தை உபயோகிக்காது என்று ஈராக் வெளிவிவகார அமைச்சர் அமெரிக்கச்செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாக வளைகுடா செய்தியொன்று தெரிவித்தது.

# மண்ணித்தலையில் ஒதுங்கிய 24 சடலங்களின் அடையாளங்கள்

## வவுனியாப்பகுதி அகதிகளாக இருக்கலாம்

(பூநகரி)

கௌதாரிமுனை வெட்டுக் காட்டில் இருந்து கல்முனை வரையிலான பூநகரித் தென் கரைக்கடற்பகுதியில் பதினாலாந் திகதி கரையொதுங்கி கண்டெடுக்கப்பட்ட ஆண், பெண், குழந்தைகள் உட்பட 14 பேரின் சடலங்களை பதினைந்தாந் திகதி பூநகரி பிரதேச விடுதலைப்புலிகளுடன் இணைந்து சிற்றூரவை உறுப்பினர்களும், கிராமசேவையாளர்களும், பொதுமக்களும் அடக்கம் செய்தனர்.

கரையொதுங்கிய சடலங்களின் அடையாள விபரங்கள் வருமாறு:-

பெரிய தோட்டம் வெள்ளைக் குளத்தடியில் 40 வயது மதிக்கத்தக்க பச்சை மேற்சட்டை அணிந்த பெண்ணின் சடலம் தலையில்லாத நிலையில்.

எட்டுவயது மதிக்கத்தக்கது ஆண்குழந்தை - கறுப்பு அரைநாணுடன், சாம்பல்நிற காற்சட்டை, சேட்டுடனும் எட்டு வயது ஆண் - சாம்பல் நிற யங்கி - கழுத்தில் வெள்ளி அட்சரக்கூடு. சுமார் பதின் நாலுவயதுடைய பெண்-கபில நிற கோடுள்ள கவுண். சாம்பல் நிறக்கவுண் - உள்ளாடையுடன். சுமார் இருபத்திமூன்று வயதுடைய பெண் - நாவல் நிற பாவாடை வெள்ளை உள் அரைப் பாவாடையுடன்.

ஏறத்தாழ பதினாறு வயதுடைய பெண் - மென்நீல ரீசேட், வெள்ளை பெனியன், பச்சைநிற உள்ளாடை, வலக் கையில் இரு அலுமினியக் காப்புடன்.

### பதினாறாந்திகதி அடக்கம் செய்யப்பட்ட சடலங்களின் விபரம்:-

எட்டு வயது மதிக்கத்தக்க ஆண் - கறுப்பு அரைநாண் - யப்பான் தாழையடியில் சடலம் சிதைந்த நிலையில் காணப்பட்டது.

இருபத்தெட்டு வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலம் கபிலநிற உள்ளாடையுடன் காணப்பட்டது.

நாற்பது வயதுடையபெண் - நீலச்சட்டை, சாம்பல்நிற உட்பாவாடை - கையில் 5 றபர்க்காப்பு.

நாற்பத்தெட்டு வயது மதிக்கத்தக்க ஆண் - றோஸ் நிற சட்டை, கபிலநிறச் சாரம் ஒரு சோடி தோடு, ஒரு மோதிரம். ஒரு பதக்கம், வலது கையில் அனுமான் பச்சை குத்தப்பட்டுள்ளது.

சுமார் நாற்பது வயது ஆண் - மொண்டியா கைக்கடிகாரம் மோதிரங்கள், ஒன்றரைப் பவுண் சங்கிலி என்பன அணிந்த நிலையில் சடலம் காணப்பட்டது.

20 வயதுடைய பெண் - கறுப்புநிற மேலாடை, கபில நிறக் கவுண். வெள்ளைச் சட்டையில் பிறைவடிவ டிசைன் - உள் கவுணுடன் - அடையாள அட்டை இல- 587752085 V - ராசு பெரியற்றால் 44ஆம் கட்டை, மடுகந்தை.

நாற்பத்தைந்து வயதுடைய ஆண் பொ. முருகையா பன்குளம் மொறவேவா. வெள்ளைச்சட்டை.

ஐந்து வயது மதிக்கத்தக்க ஆண் குழந்தை நீல யங்கி, கால்சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

சுமார்முப்பது வயது ஆண் வலதுகையில் இயேசு பச்சை குத்தப்பட்டுள்ளது- சாம்பல் நிறச்சட்டை

பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறுவன். நீலக்காற்சட்டை கறுப்பு அரைப்பட்டி நீலக்கோடு உடைய வெள்ளைச்சட்டை. சாம்பல் நிறச்சட்டை ஆகிய இருசட்டைகளை அணிந்த நிலையில்.

இருபது வயது மதிக்கத்தக்க இளம் பெண் சிவப்பு நிறப்பாவாடை மேற்பாக உள்ளாடை கறுப்பு.

இருபத்தெட்டு வயதுடைய ஆண் நீலக்கோடு சாரம் நாவல் நிறச்சட்டை (சிறிய கோடு) காசு -1220/- அடையாள அட்டை இல- 582321 1800 X கு. துரைராசா புகையிரத நிலையவீதி, வவுனியா

நாற்பத்திரண்டு வயது ஆண். நீலக்கோடு சாரம் றோஸ் நிறசட்டை, சூக்கேஸ் திறப்புடன் வவுனியா. தெ.த பகுதி ப. நோ. கூ. சங்கப் பற்றுச் சீட்டுடன்.

பன்னிரண்டு வயதுடைய சிறுமி நீலநிற பெனியன். பச்சை நிற கவுண் இடது கையில் சிவப்பு நிற நூல் பெனியனில் கொமாண்டோ என்ற ஆங்கிலச் சொல் எழுதப்பட்டுள்ளது.

பதினான்கு வயது இளம் பெண் நீலப்பாவாடை றோஸ் நிறச்சட்டை இடதுகையில் கறுப்பு நூல். உட்பாவாடை கறுப்பு - வெளிப்பாவாடை சிவப்பு

பதினைந்து வயது இளம் பெண் - றோஸ் நிறக்கவுண் றோஸ் சேட்டில் ஆள் அடையாளம்

பன்னிரண்டு வயது சிறுமி அடையாளம் இல்லை.

நாற்பத்தேழு வயது மதிக்கத்தக்க ஆண். அடையாளம் எதுவும் இல்லை.

## மண்ணித்தலைக்கு அகதிகள்

(ஈச்சமோட்டை)

இலங்கை விமானப்படையினர் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி குண்டு வீச்சு தாக்குதல் மேற்கொண்ட அச்சத்தினால் பாஷையூர் குருநகரில் பெரும்பாலான மக்கள் மண்ணித்தலைக்கு சென்று அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

அங்கே போதியளவு குடிநீர் வசதி இல்லை என்றும் தங்குவதற்கு கொட்டகை போடுவதற்கு மரம், கிடுகு இல்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (43)

## நிவாரண உதவி

தீவுப்பகுதி பயிலுநர் ஆசிரியர் சங்கம் அகதிகளுக்குரிய நிவாரணப் பொருட்களை பொது மக்களிடம் சேகரித்து தமிழர் புனர் வாழ்வுக் கழகத்திடம் வழங்கியுள்ளது.

# ஜெயலலிதா அணித்தொண்டர்கள் தமிழ் நாட்டில் பெருமளவில் கைது!

## சென்னையில் பெரும் பேரணிக்கு ஏற்பாடு; மோதலைத் தடுக்க பாதுகாப்பு தீவிரம்

(சென்னை)

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தலைமையில் இன்று திங்கட்கிழமை சென்னையில் பேரணி ஒன்று நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதைத் தொடர்ந்து அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுப்பதற்காக தமிழ்நாடு முழுவதிலும் நூற்றுக்கணக்கான அ. இ. அ. தி. மு. கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பேரணி சம்பந்தமாக முன்னெச்சரிக்கையாக சட்டசபை அமைந்துள்ள பகுதிகளிலும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அ. இ. அ. தி. மு. கழகத்திலிருந்து திருநாவுக்கரசு கே. கே .எஸ் எஸ். ஆர். இராமச்சந்திரன் உட்பட மூவர் விலக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் தங்களுடைய கழகமே உண்மையான அ. இ. அ. தி. மு, கழகமென்றும் தலைமைச் செயலகக் கட்டிடம் தங்களுக்கே சேரவேண்டுமென்றும் உரிமை கோரியதும் செல்வி ஜெயலலிதா தலைமையிலான குழுவுக்கும் அவர்களுக்குமிடையில் அடிதடி ஏற்பட்டதும் இதைத்தொடர்ந்து தலைமைச் செயலகத்தை மூடிப் பொலிசார் சீல்வைத்ததும் தெரிந்ததே.

தம்மிடமே தலைமைச் செயலகத்தை ஒப்படைக்க வேண்டுமெனக் கோரி செல்வி ஜெயலலிதா தமது இல்லத்தில் உண்ணாவிரதம் ஆரம்பிக்க திருநாவுக்கரசு குழு தம்மிடமே தலைமைச் செயலகம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனக் கோரி உண்ணாவிரதமிருந்தனர்.

இவ்விஷயத்தை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப் போவதாகக் கூறி திருநாவுக்கரசு குழு உண்ணாவிரதத்தை நிறுத்தியது. ராஜீவ் காந்தி, வாழப்பாடி கேட்டுக்கொண்டதால் ஜெயலலிதா உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

இதன்பின் சென்னை வந்த இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனிடமும் இரு தரப்பினரும் தலைமைச் செயலகத்தைத் தங்களிடம் பெற்றுத் தருமாறு மகஜர் கொடுத்தனர்.

இன்று சட்டசபை கூடும்போது தலைமைச் செயலகத்தைத் தம்மிடம் ஒப்படைக்குமாறுகோரி மாபெரும் பேரணியொன்றை நடத்த ஜெயலலிதா திட்டமிட்டிருக்கிறார்.

பிரதான எதிர்க்கட்சி எது?

இது இவ்வாறிருக்க அ. இ. அ. தி. மு. கழகத்திலிருந்து திருநாவுக்கரசுவும் மற்றுமிருவரும் நீக்கப்பட்டுவிட்டதாலும் மற்றும் நால்வர் இக்குழுவுடன் சேர்ந்துகொண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டிருப்பதாலும் தமிழ்நாடு சட்டசபையில் ஜெயலலிதா அணியின் பலம் குன்றிவிடுமெனக் கருதப்படுகிறது. கழகத்திலிருந்து மூவரே விலக்கப்பட்டிருப்பதாலும் மற்றும் நால்வர் விலக்கப்படவில்லை என்றும் ஜெயலலிதா அணி கூறுகிறது. சட்டசபை இன்று கூடும்போதுதான் பிரதான எதிர்க்கட்சி எது என்பது முடிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜெயலலிதா புகாருக்கு மறுப்பு

தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் தமிழ்க் குடிமகன்மீது குற்றஞ்சாட்டி ஜனாதிபதி வெங்கட்ராமனிடம் அ. இ. அ. தி. மு கழக செயலாளர் செல்வி ஜெயலலிதா சமர்ப்பித்த குற்றச்சாட்டுக்களை மறுத்து பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன் ஜனாதிபதிக்குப் பதிலனுப்பியிருக்கிறார்.

## யாழ்.நகர் மீது விமானங்கள் நேற்று தலை காட்டவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று வானம் வெறிச் சோடிக் காணப்பட்டது. கடந்த பல நாட்களாக யாழ். நகர் மீது அகோர குண்டு வீச்சுத்தாக்குதல்களை மேற்கொண்டு வந்த சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நேற்று யாழ்நகர்ப்பக்கமே தலைகாட்டவில்லை. நேற்று முன்தினம் யாழ்நகரிலும் நல்லூர் சந்தசுவாமி கோயிலை அண்டிய பகுதிகளிலும் இவ் விமானங்கள் குண்டுவீச்சு நடாத்திய போது நடைபெற்ற எதிர்பாராத எதிர்த்தாக்குதல்களின் விளைவே இத்தாக்குதலின் இடைநிறுத்தத்துக்கு காரணமாக இருக்கலாம் எனவும் தெரிகிறது. (லோ)

### புலிகளிடம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணிவெடிகளை விடுதலைப் புலிகள் கண்டுபிடித்துப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்களென்றும், சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார். இத்தகவலை நேற்றிரவு வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது

### சினைப்பருக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீது சினைப்பர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார்.

இச்சமயம் இந்த இராணுவ முகாமை அண்டிய பகுதிகளில் விமானங்கள் குண்டு வீச்சு நடாத்திய வண்ணம் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். (58)

### காட்டிக் கொடுத்த

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மரண தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த 16 ஆம் திகதியன்று கஞ்சிக்குடிச்சான் ஆறு என்னும் இடத்தில் ஈ.பி.ஆர்.எல் எப் உறுப்பினர் ஒருவரை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இவர் திருக்கோவில் இராணுவ முகாமில் இருந்து கொண்டு விடுதலைப் புலிகளையும், அவர்களது ஆதரவாளர்களையும் சிங்கள இராணுவத்தினருக்குக் காட்டிக் கொடுத்தவராவார்.

### அதிரடிப்படை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்றாக அழிக்கப்பட்டு வருகின்றன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 12 ஆம் திகதி மாலை ஐந்து மணிக்கு சேனைக்குடியிருப்பிற்குள் புகுந்த முஸ்லிம் ஊர்காவற்படையினர் பத்துத் தமிழர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

அதே தினத்தில் துறைநீலாவணை கிராமத்தில் மாலை 5.30 மணிக்கு துவிச்சக்கர வண்டிகளில் சென்றுகொண்டிருந்த ஐந்து தமிழ் இளைஞர்களை சிங்கள இராணுவத்தினர் சுட்டுக்கொன்றுவிட்டு, இறந்தவர்களின் உடல்களை டயர் போட்டு எரித்துள்ளனர். (ம)

### ஆடு மாடு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதினாறு வயதிற்கும் பதினெட்டு வயதிற்கும் உட்பட்ட பெண்கள் ஒன்பது பேர் இவர்கள் கத்திகளால் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.

திருமணமான பெண்கள் முப்பத்திமூன்று பேர்களையும் வெட்டியும், சுட்டும் கொன்றுள்ளனர்.

திருமணமான ஆண்களும் வயது முதிர்ந்தவர்களும் பத்தொன்பது பேர். இவர்களும் வெட்டியும், குத்தியும் கொல்லப்பட்டனர்.

இக் கொலை வெறிச்சம்பவத்தின் பின்னர் வீரமுனையிலுள்ள பல வீடுகள் முஸ்லிம்களினால் கொள்ளையடிக்கப்பட்டும், உடைமைகள் சேதமாக்கப்பட்டுப் பின்னர் வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்டன. (ம)

## சிகிச்சைக்கு சி. எஸ். பயணம்

(புதுடில்லி)

மகாராஷ்டிர மாநில ஆளுநரும் முன்னாள் இந்திய மத்திய நிதி அமைச்சரும் தமிழ் நாட்டில் காமராஜ் அமைச்சரவையில் பல அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக இருந்தவருமான திரு. சி. சுப்பிரமணியம் இருதயநோய்ச் சிகிச்சைக்காக நேற்று அமெரிக்காவிலுள்ள ஹரிஸ்ரன் நகருக்குப்பயணமானார். கடந்த மூன்று மாத காலமாக இவர் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார்.

### நேற்று

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செற்றி குண்டுவீச்சு விமானங்கள் சாவகச்சேரி பகுதியில் வட்டமிட்டன. நீண்ட நேரம் வட்டமிட்ட பின்பு திடீரென தனங்கிளப்பு வெளியை அண்டிய சேற்று நிலத்தில் குண்டுகளை வீசின. இதில் ஒரு குண்டு மட்டும் வெடித்தது. இத்தாக்குதல் சனநடமாட்டமே இல்லாத பகுதியில் நடாத்தப்பட்டதால் எவரும் காயமடையவில்லை இதனைத் தொடர்ந்து காலை பத்து மணியளவில் சாவகச்சேரி பகுதியை அண்டியுள்ள புத்தூர் சந்தியில் ஹெலிக்கொப்ரர் ஒன்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது. இத்தாக்குதலின்போது சாவகச்சேரி கண்டி வீதியில் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த மூவர் சிறு காயங்களுக்குள்ளானார்கள். தொடர்ந்து வேம்பிராய்ப் பகுதியிலும் கொடிகாமத்திலும் ஹெலிக்கொப்ரர் தாக்குதல் நடாத்தப்பட்டது.

### யா. ப நோ.

(1ஆம் பக்கத் தெங்டர்ச்சி)

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங்கப்பட்டதாக புலோலி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கப் பொது முகாமையாளர் திரு. சோ. அருணகிரி ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

### தமிழ்நாடு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் இலங்கையிலிருந்து பெருமளவில் அகதிகளாக வந்து குவிவதால் தமிழ்நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றலாமென்றும் அகதிகள் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பது பற்றி எதிர்க்கட்சியினர் இன்றுசட்டசபையில் பிரச்சினை கிளப்பக் கூடுமென்றும் இது சம்பந்தமாக முதலமைச்சர் மு. கருணாநிதி ஒரு விரிவான அறிக்கையை வெளியிடவேண்டுமென்று எதிர்கட்சியினர் கோரலாமென்றும் சட்டசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மத்திய அரசுடனும் பிரதமர் வி. பி. சிங்குடனும் தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்தும் தமிழ் அகதிகள் பிரச்சினை இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தும் முதலமைச்சர் மு கருணாநிதி அறிக்கை வெளியிடலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அரச ஊழியர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அரச ஊழியர் அனைவரையும் நாளை காலை ஒன்பது மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

இக் கூட்டத்தில் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும், அதிபர்களையும் பங்குபற்றுமாறும் அவர் வேண்டுகிறார். இவ்வேளை வெளிமாவட்டத்திற்குச் செல்வதற்கான அனுமதி பெறுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். (மு)

## தேர்த் திருவிழாவில் சங்கிலித் திருட்டு பிடிபட்டது

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர் திருவிழா உற்சவ வேளையின்போது திருமதி முத்தையா என்பவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி ஒன்றை அறுத்த பெண் அதனை எடுத்துக் கொண்டு ஓட முயற்சித்தபோது கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். அச்சமயம் இப் பெண் தான் அறுத்த சங்கிலியை எறிந்துவிட்டுத் தப்ப முயற்சித்ததாக கையும் மெய்யுமாகப் பிடித்தவர்கள் கூறினார்கள்.

மேலும் இப் பெண் கடந்த வருடமும் இதே குற்றத்திற்காக பிடிபட்டிருந்தார் என மாநகரசபை அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர். திருடிய பெண்ணால் எறியப்பட்ட சங்கிலி பின் சில பக்தர்களால் கண்டெடுக்கப்பட்டு மாநகரசபை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுப் பின் உரியவரிடம் கையளிக்கப்பட்டது. (லோ)

### புத்தளம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் தரப்பில் பத்துப்பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இவர்களிடம் இருந்து ரீ 56-2 ஆறும் ரீ.56-1 ஒன்றும், தொலைத்தொடர்பு சாதனம் ஒன்றும், ஜேர். ஆர் கைக்குண்டுகள் பதினாறும், மகசீன் முப்பத்தி ஒன்றும், ரவைகள் எழுநூற்றித்தொன்னூற்றிஏழும், தலைக்கவசம் பத்தும், கோல்சர் எட்டும், சப்பாத்து மூன்று சோடியும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம)

### கண்ணிவெடியில் ஆறு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் வெடித்ததில் இரண்டு இராணுவத்தினர் கால்களை இழந்தனர்.

நேற்று 19ஆம் கட்டையில் இருந்து விசாரமாலைக்கு இராணுவத்தினர் வரும்போது கண்ணிவெடி வெடித்ததினால் மூன்று இராணுவத்தினர் கால்களை இழந்தனர். (ம)

### கண்ணிவெடி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் ஏற்கனவே புதைத்து வைத்திருந்த வாகனக் கண்ணிவெடி ஒன்று வெடித்ததினால் இராணுவத்தினரின் வாகனம் முற்றாகச் சிதறியது.

இக் கண்ணிவெடித் தாக்குதலால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட வேறு சேத விபரங்கள் பற்றித் தெரியவரவில்லை. (ம)

## வேங்கைகளின் விடுதலை ராகங்கள்

விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப் பிரிவினரின் முதலாவது வெளியீடான (வேங்கைகளின் விடுதலை ராகங்கள்) பாடல் ஒலிப்பதிவு நாடா விற்பனைக்காக வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழீழ இசைக்கலைஞர்கள் பாடகர்கள், பாடகிகள் கூட்டுமுயற்சியான இந்தப் பாடல் ஒலிப்பதிவு நாடா தற்போது குடாநாடெங்கும் விற்பனையாகின்றது. போராட்டச் சிந்தனையையும் போராட்ட உணர்வையும் உந்தித்தள்ளும் வகையில் பாடல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப் பிரிவினரின் இம்மாதிரியான ஒலிப்பதிவு நாடாக்களின் வருகை இனித் தொடரும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ‘‘ஈழநாதம்’’ பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.